## 20-வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம், எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 03.

தேதி 06.04.2026

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | – | C.C.No. 1938/2021 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா.1 |
| பெயர் | – | மதன கோபால் |
| தந்தை பெயர் | – | |
| முகவரி | – | |
| வயது | – | |

2023-ம் வருடத்திய பாரதிய சாக்சிய அதிநியம் வகையங்கள்படி இன்று 06.04.2026 என்னால் உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(வாதி ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது.)

**நேரம்** : 03.35 மணி.

குறுக்கு விசாரணை

**1. நான் தற்போது எனது தந்தைக்கும் எதிரிக்கும் இடையேயான வங்கி பரிவர்த்தனைகள் குறித்து எதிரியின் ஐடிஎப்சி பர்ஸ்ட் வங்கியில் கணக்கு எண் 1002894853-ன் 01.07.2019 முதல் 30.09.2019 வரையான காலகட்டத்தில் நடந்த வங்கி கணக்கு விவர பட்டியல் தற்போது என்னிடம் காட்டபடுவதுதான். அது எ.த.சா.1 ஆகும். எனது தந்தைக்கும் எதிரிக்கும் இடையேயான வங்கி கணக்கு பரிவர்த்தனைகள் என்னால் சமர்பிக்கமுடியும். எதிரி கொடுத்ததாக நான் கூறியிருக்கும் கடன் உறுதி சீட்டு இரண்டினையும் இருபது ரூபாய் முத்திரைதாள்கள் இரண்டிணையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.**

**2. மேற்படி ஆவணங்கள் தற்போது என்னிடம் நகல்களே உள்ளபடியால் அவற்றை நீதிமன்றத்தில் சமரபிக்கவில்லை ஆவணங்கள் கிடைக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் சமர்பிக்கின்றேன். என்னுடைய தந்தை இறந்தது குறித்து இறப்பு சான்றிதழையும் வாரிசு சான்றிதழையும்**

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆவணமாக கூறியீடு செய்யவில்லை. 14.05.2019 அன்று ஐம்பது ஆயிரம் ரூபாய் பணத்தினை காவல் நிலையத்தில் வைத்து எதிரி எனது தந்தையிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 18.05.2019, 25.05.2019 ஆகிய தேதிகளில் முறையே ரூபாய் 4000/-, ரூபாய் 11000/-, பணத்தினை எதிரி எனது தந்தையின் வங்கி கணக்கிற்கு (paytm) செயலி மூலமாக அனுப்பினார் என்றால் பணம் அனுப்பப்பட்டது தேதி நினைவில் இல்லை. மேற்படி தொகை வட்டிக்காக செலுத்தப்பட்டது. இது குறித்து (paytm) செயலி எதிரியின் வங்கி கணக்கு பட்டியல் 01.05.2019 முதல் 31.05.2019, மேலும் 01.07.2019 முதல் 31.07.2019 வரையானதற்கு தற்போது என்னிடம் கண்பிக்கபடுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்காக பாரதிய சாட்சிய ஆதிநியம் 2023 பிரிவு 63-ன் கீழ் சான்று இணைக்கப்பட்டது. அவை முறையே எ.சா.ஆ 2,3 ஆகும்.

3. என்னுடைய துாண்டுதலால் எனது தந்தை இந்த வழக்கை தாக்கல் செய்தார் எதிரி பொறுப்புறுதிக்காக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வங்கி கணக்கில் செலுத்தியது போக எதிரி தங்க நாணயங்களாக எனது தந்தைக்கு செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி எனது தந்தைக்கு கொடுக்க வேண்டிய பாக்கி இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியம், சாட்சி சொல்ல, சொல்ல என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி சாட்சியத்தை சாட்சிக்கு என் முன்பாக படித்துக்காண்பிக்கப்பட்டு, அவர் முழுமையாக உள்ளது என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

20-வது பெருநகர குற்றவியல் நடுவர்,
எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை-03.